

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம் , இளந்திரை , அண்ணாமநல்லூர், டி.புதுப்பாளையம், ஏனாதி மங்கலம், ஆகிய ஊராட்சிகளில் பள்ளி மாணவர்களுக்கு சீருடை, பொதுமக்களுக்கு அன்னதானம், மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகளை விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி வழங்கினார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட துணை செயலாளர் டி.என்.முருகன், ஒன்றிய செயலாளர்கள் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஜெ.ஜெயபால், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல் உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க.

# இளைஞர் அணி சார்பில் ஆத்தூர் - புதுக்கோட்டையில் மாபெரும் கண்டன பொதுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் , அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!



தூத்துக்குடி, மார்ச் 22 -

தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்று முதலமைச்சர் தி.மு.க தலைவர் தளபதியார் அறிவித்துள்ளார். இதற்கேற்ப பல்வேறு நிகழ்ச்சிகளை போராட்டங்களை தி.மு. கழகம் மற்றும் சார்பு அணிகள் சார்பாக நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டை வஞ்சிக்கின்ற, நிதி தர மறுக்கின்ற, மும்மொழி திட்டத்தை திணிக்கின்ற, நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையை குறைக்க திட்டமிடுகின்ற ஒன்றிய அரசிற்கு எதிராக தமிழ்நாடு முழுவதும் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் கண்டன பொதுக் கூட்டங்கள் நடத்த வேண்டுமென்று துணை முதலமைச்சர் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் தூத்துக்குடி தெற்கு மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதி ஆத்தூரில் 22.03.2025 அன்று மாலை 5 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் தலைமையிலும், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், ஆழ்வை மேற்கு ஒன்றியச் செயலாளர் வி.நவீன் குமார், முன்னாள் ஒன்றியச் சேர்மன் ச.ஜனகர், பேரூராட்சி மன்ற தலைவர் ஏ.கமால்தீன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும் நிகழ்ச்சியில்

ஆழ்வை கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.பி.சதீஷ் குமார் வரவேற்புரையாற்றுகிறார். பேரூர் கழக செயலாளர் எம்.பி.முருகானந்தம் நன்றியுரை வழங்குகிறார்.

பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் தி.மு.க உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் (நான்) கழக இளம் பேச்சாளர் மு.கார்த்திக் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

அதேபோல் மார்ச் 23 அன்று ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி புதுக் கோட்டையில் மாலை 5 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பை.மூ.ராமஜெயம் தலைமையிலும், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், தூத்துக்குடி மேற்கு ஒன்றியச் செயலாளர் புதூர் எஸ்.கே. சுப்பிரமணியன், கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஆர். சரவணக்குமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும் நிகழ்ச்சியில் தூத்துக்குடி மத்திய ஒன்றியச் செயலாளர் கே.கே.ஆர். ஜெயக்கொடி வரவேற்புரையாற்றுகிறார். ஒன்றிய அவைத்தலைவர் எஸ்.பாலசுந்தரம் நன்றியுரை வழங்குகிறார். பொதுக்கூட்டத்தில் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் (நான்), திராவிட இயக்க சிந்தனையாளர் சூர்யா சேவியர், கழக இளம் பேச்சாளர் கோ.சண்முக நாராயணன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் கிளை, வட்டம், வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் மாவட்டம் முழுவதும் உள்ள கழக செயல் வீரர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

### மரக்காணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்! நல உதவிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்! ஆலந்தூர் மலர் மன்னன் சிறப்புரை!

திண்டிவனம், மார்ச் 22 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கழக அரசின் சாதனை விளக்க பொதுக் கூட்டம்மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஓமந்தூர் ஊராட்சியில் நடைபெற்றது.

மரக்காணம் ஒன்றிய துணைப் பெருந்தலைவரும் மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளருமான பழனி தலைமை தாங்கினார்.ஒன்றிய நிர்வாகிகள் குமார், சரவணன், ரவிக்குமார், மீனா குமாரி, ஆதிகேசவன், ராமமூர்த்தி, தேவதாஸ், ஊராட்சி மன்ற தலைவர் ராஜ சுலோச்சனா ,கிளை கழகசெயலாளர்கள் மணிகண்டன், ராஜாராமன், நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.ஒன்றிய பொருளாளர் முருகன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்ஆலந்தூர் மலர்மன்னன்,விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்தனர்

தொடர்ந்து முதல மைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் ரமணன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார்,மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் திருமலை, செந்தில்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டிகேபி ரமேஷ்மாவட்ட கவுன்சிலர் புஷ்பவள்ளி குப்புராஜ்,ஒன்றிய கவுன்சிலர்கள் வேலாயுதம், கன்னியம்மாள், அமுதா கிருஷ்ணமூர்த்தி, திருநாவுக்கரசு, மகாலட்சுமி காளிதாஸ் , விநாயகம், நாகஜோதி கணேஷ், உள்ளிட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகி கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சம்பத் நன்றி கூறினார்.



தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, திருக்கோவிலூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.ஆர் (எ) ராஜேந்திரன் தலைமையில் திருக்கோவிலூர் தெற்கு ஒன்றியம், கோமாளூர் ஊராட்சியில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது, இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் வரகூர் காமராஜ் கலந்து கொண்டு பாசிச ஒன்றிய அரசுக்கு எதிரான கொள்கைகளை கூறி சிறப்புரையாற்றினார், இக்கூட்டத்தில் திருக்கோவிலூர் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட மாவட்ட,ஒன்றிய சார்பணி நிர்வாகிகள்,கிளைக்கழக செயலாளர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள்,கழக முன்னோடிகள் கழக நிர்வாகிகள்,பாக முகவர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



வட சென்னை தமிழ்ச்சங்கம் சார்பில் நடைபெற்ற கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவில், ‘திராவிடச் சுடர் தளபதி மு.க.ஸ்டாலின் விருதை’ கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்களுக்கு மாநில காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வழங்கினார். இந்திரகுமார் தேரடி உள்ளிட்டோர் உடனுள்ளார்கள்.

### கழகத் தலைவர் - முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் 72-வது பிறந்தநாள் விழா!

# வட சென்னை தமிழ்ச் சங்கம் சார்பில் கவியரங்கம், கருத்தரங்கம், வாழ்த்தரங்கம்!

## செல்வப்பெருந்தகை, கவிச்சுடர் கவிதைப்பித்தன், இந்திரகுமார் தேரடி, எ.த.இளங்கோ பங்கேற்பு!

சென்னை, மார்ச் 22 -

முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்தநாளை வட சென்னைத் தமிழ்ச்சங்கம், கடந்த 18.3.2025 அன்று, சென்னை வேப்பேரி, தந்தை பெரியார் திடலில், தியாக மங்கை அன்னை மணியம்மையார் அரங்கில், கவியரங்கம், கருத்தரங்கம், வாழ்த்தரங்கமாகக் கொண்டாடினர்.

வடசென்னைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் ப.மனோகரன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், வட சென்னைத் தமிழ்ச் சங்கத் தலைவரும் விழா ஏற்பாடுகளை முன்னின்று செய்தவருமான எ.த. இளங்கோ வரவேற்புரையாற்றிட, ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி உரையாற்றினார்.

அதன்பிறகு நடந்த வாழ்த்தரங்கில், கழக இலக்கிய அணியின் மாநிலத் துணைத்தலைவர், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்களுக்கு, “திராவிடச் சுடர்” தளபதி மு.க. ஸ்டாலின் விருதினை வழங்கி, தமிழ்நாடு சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவருமான செல்வப்பெருந்தகை பேசினார்.

அதன்பிறகு கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமையில், “முதல்வருள் முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின்” என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

அறச்சீற்றத்தில் பெரியார் என்ற தலைப்பில், கவிஞர் முனைவர் மஞ்சுளா, அன்பைப் பொழிவதில் அண்ணா என்ற தலைப்பில், கவிஞர் அமுதா பொற்கொடி, தமிழைக் காப்பதில் கலைஞர் என்ற தலைப்பில் கவிஞர் வி.உ.இளவேனில், தன்மானத்தில் பேராசிரியர் என்ற தலைப்பில், கவிஞர் ஆரூர் த.இலக்கியன் ஆகியோர் பாட்டரங்கத்திற்குச் சிறப்புச் சேர்த்தார்கள்.

இயக்குநர் செல்வராஜ், விருகை மதிவாணன், கவிஞர் வீ.ம.இளங்கோவன், கவிஞர் பா.சந்துரு, அம்பேத் பி.சரவணன், இரா. பிரவீன், தளபதி பாண்டியன், விருகை சவுந்தர், மா.சிவகுமார், நா.பாபு, வழக்கறிஞர் டி.தூயவன், பா.கோவிந்தசாமி, வட சென்னைத் தமிழ்ச் சங்கத் துணைச்செயலாளர் ரமாபாய் மற்றும் தி.மு.க. திராவிடர் கழகத் தோழர்கள், பல்வேறு இலக்கிய அமைப்பினர், தமிழ் ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

விழா நிறைவாக வட சென்னைத் தமிழ்ச் சங்கத் துணைச் செயலாளர் ரேகா நன்றி கூறிட, விழா இனிதே நிறைவுற்றது.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி – திருமயம் சட்டமன்றத் தொகுதி சார்பில்

# ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் ராச கம்பீரன் அப்பாஸ், இரா.பிரீத்தி கண்டன உரை!

புதுக்கோட்டை, மார்ச் 22 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி திருமயம் சட்டமன்ற தொகுதி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் இன்று 22.03.2025 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் சீரணி கலையரங்கம் திருமயத்தில் நடைபெறுகிறது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன் வரவேற்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர்,புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.ரகுபதி தலைமை வகிக்கிறார்.

மாவட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்

பி.இளையராஜா, இரா. தமிழ்ராசு,.ஏ.முகமது ரபீக், க.கவிக்குமார். நா.நசுருதீன், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் ஆறு.அழகு சிதம்பரம். இரா.கணேசன், பொன்.ராமலிங்கம், வி. ஆர்.இளையராஜா அ. அடைக்கலமணி, அ.முத்து, அ.அழகப்பன், நாசர் (எ) செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தமிழ்நாடு பிற்படு த்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தலைமை கழக பேச்சாளர்கள் ராச கம்பீரன் அப்பாஸ், இரா.பிரீத்தி ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா. இளையராஜா, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் திருமயம் தொகுதி பார்வையாளர் ஜி.பி.ராஜா (எ) பிரதீப் ராஜா, மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர்.ரகு அண்ணாமலை, மாவட்ட நிர்வாகிகள் அ.சுப்ரமணியன், ஞான.இளங்கோவன், க. அடைக்கலம், அ.ஸ்ரீதேவி அண்ணாத்துரை, ஜெ.அபுதாகீர், எஸ்.ஜெயராமன், ஆர்.ஆர்.கே.கலைவாணி,

மெ.இலக்குமணன். கருப்பையா, சித.ஆவுடையப்பன், பி.சரவணன், ஏ. எல்.மணிவாசகம், பி.எல். கரிகாலன, சுப.செம்பையா, சி.செல்வராணி, பி.சரவணன், எஸ்.நவமணி, ராமசாமி, வேங்கிஅரசன், ஆர்.கணேசன் சுப. துரைராஜா, கே.ரமேஷ். எஸ்.பாலசுப்ரமணியன், ஏ.எல்.முத்து, பி.சண்முகம், பெரியசாமி, நா.கார்த்திக் சி.ராஜ கோபால், ஆர்.சுப்பையா, மு.ராதா கிருஷ்ணன், ஆர்.கருப்பையா, ஏ.செல்வ ராய், கா.பாலசுப்ரமணி யன் வை.பாண்டியன், ஆ.சாத்தையா, ரா.மலர், கா.யோகநாதன், கே.ஆர்.இராமநாதன், மெ.இளங்கோ ஆ.செல்வராஜ், க.செல்லக்கண்ணு, செ.பஞ்சநாதன், மா.காசிநாதன், செ.மணிமேகலை, பெரி.வீரப்பன், மணி, அ.சுப்ரமணியன், முருகேசன்.கே..தவசுமணி. கே.பி.. கணேசமூர்த்தி, சின்னையா, ஆர்.விகாஸ் எம். பாலசுப்ரமணியன். சி.மணி, எம்.சிக்கந்தர்,ஆர். காளிதாஸ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இராம.மேகநாதன், கே.ஆர். ராமசாமி, எம்.தேவி, டாக்டர்.சுதர்சன், என்.ராமலிங்கம், உமணிகண்டன்,

மாவட்ட அலபிகளின் துணை அமைப்பாளர்கள் :

ஜெ.ஜான்பீட்டர், சே.ராஜமாணிக்கம், டாக்டர் ராஜசேகரபாண்டியன், பழனியப்பன். சாமி. சுரேஷ். சையது உசேன், சண்முகசுந்தரம், கே.எல். ஆனந்தன், எஸ்.மாரிமுத்து, கே.ராஜன், ஏஆர்.சுரேஷ். எம்.காத்தப்பன், ஆர்.அண்ணாத்துரை ஆறுமுகம், ஏ.ஆர்.பாலகிருஷ்ணன், கே.கார்த்திக்குமார், டி.ராமசாமி, ஆனந்தகுமார். கா.பொற்செல்வன் ஏ.வி.எம்.வெள்ளைச்சாமி ஆர்.அய்யாச்சாமி, சி.சந்திரன், ஏ.செந்தில்குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை, வார்டு, உள்ளாட்சி அமைப்பின் முன்னாள், இந்நாள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள். கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்கின்றனர். முடிவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அருண்குமார் நன்றி கூறுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டாங்கொளத்தூர் எம்.வி.இராமு

### மார்ச் 22 (2017)



காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

காட்டாங்கொளத்தூர் ஒன்றியக்குழுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.